CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

***15 செப்டெம்பர் 2021, கொழும்பு, இலங்கை:*** சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை மதுபோதையில் இரண்டு சிறைச்சாலைகளுக்குள் நுழைந்தது மற்றும் விளக்குமறியலிலுள்ள கைதிகளைத் தாக்குவதற்கு முயற்சித்தது மூலம் தனது அமைச்சுப் பதவி நிலையைத் துஷ்பிரயோகித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு சம்பவங்கள் குறித்தான ஊடக அறிக்கைகளினால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. செப்டெம்பர் 12ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை, குறித்த இராஜாங்க அமைச்சர் நண்பர்கள் குழுவொன்றுடன் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் நுழைந்ததாக அறிவிக்கப்படுகிறது. இதன் பின்னர் அவர் உலங்கு வானூர்தி மூலம் அநுராதபுரத்திற்கு பிரயாணித்ததாகவும் அங்கு அவர் அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்து இரண்டு சந்தேகநபர்களை தன் முன்னே முழந்தாளிட துப்பாக்கிமுனையில் கட்டளையிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. இந்த இரண்டு சம்பவங்களும் தனிப்பட்ட சந்தோஷத்திற்காக அரசியல் பதவியை வீம்படித்தல், சிறைக்கைதிகளின் உரிமைகள் மற்றும் மனித கௌரவம் என்பவற்றுக்கான இரக்கமற்ற நிலை மற்றும் அலட்சியம், ஆட்களை அச்சுறுத்துவதற்கு ஆயுதங்களின் பாவனை மற்றும் இலங்கையின் சட்டவாட்சிக்கான அவமதிப்பு என்பவற்றுக்கான அபாயகரமான போக்கையே பிரதிபலிக்கின்றன. இந்தச் சம்பவங்களின் தீவிரத் தன்மையின் பின்னணியில், குறித்த இராஜாங்க அமைச்சரின் உடனடியான பதவி விலகுதலிற்கும், சம்பவம் தொடர்பில் ஒரு நம்பகத்தன்மையான விசாரணையை அதிகாரிகள் முன்னெடுப்பதற்கும், மற்றும் அச்சமோ அல்லது தயவோ இன்றி நடவடிக்கை எடுப்பதற்கும் மா.கொ.நி வேண்டிக் கொள்கிறது.

பொறுப்புக்கூறலிற்கு அறியப்பட்ட வகையில் உள்நாட்டுச் செயன்முறைகளின்றி சிறைக்கைதிகளின் இறப்புகளுக்கும் இட்டுச் சென்ற பல சிறைக் கலவரங்கள் உட்பட முன்னைய வன்முறைச் சம்பவங்களின் பின்னணியை முன்னிட்டு இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதையும் மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. 2001 இல் உடத்தலவின்ன எனுமிடத்தில் பத்து முஸ்லிம் இளைஞர்களின் கொலைகளில் திரு. ரத்வத்தையும் ஏனைய பலரும் கொலைகளுக்காக குற்றஞ் சாட்டப்பட்டு ஆனால் பின்னர் விடுதலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட அவரது சம்பந்தப்படுதலுக்கு தொடர்புபட்ட கடந்த கால வன்முறைச் சம்பவங்களினால் இது கூட்டிணைக்கப்படுகிறது. அவ்வாறன தண்டனை விலக்களிப்பு பின்னணியொன்றில், புலன்விசாரணை செய்து மற்றும் குற்றமிழைத்தவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கு கருதப்படும் ஒரு சுயாதீன செயன்முறையைப் பாதிக்கும் சாட்சியங்களைக் கலைத்தல் மற்றும் சாட்சிகளை அச்சுறுத்தல் தொடர்பாக உண்மையான அச்சங்கள் அங்குள்ளன. இவை, பல அடையாளமயமான வழக்குகளில் நீதியின் பின்னடைவுகள் மற்றும் இலங்கையில் கட்டமைப்புச் சீர்திருத்தங்களுக்கான அவசரமான தேவை என்பவற்றைப் பேசுகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் (யு.என்.எச்.சி.ஆர்) நடைபெறும் 48 ஆவது அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் பதிவுகள் கலந்துரையாடப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இந்த இரண்டு சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரின் உரை மூலமான இற்றைப்படுத்தலுக்கு, *''பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அனைத்து வகையான பிரச்சினைகள் தொடர்பாக உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கு பற்றுறுதி கொண்டிருக்கிறோம்''* என இலங்கை அரசாங்கம் பதிலிறுக்கும் சமயத்தில் உண்மையில், இந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. முக்கியமான இந்த சந்தர்ப்பத்தில், ஏனைய பலவற்றின் மத்தியில், குறைந்தது இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாக துரிதமான மற்றும் உறுதியான நடவடிக்கை எடுப்பதற்கான இயலாமை, அதன் சொந்த அறிக்கைகளைக் கடைப்பிடிப்பதில் இலங்கை அரசாங்கத்திற்கு உண்மையான நோக்கம் இல்லை எனும் ஒரு தெளிவான செய்தியை அனுப்புமென்பதுடன் இலங்கையில் அடக்குமுறை மற்றும் குற்றவிலக்களிப்பு நிலைமை தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகங்களால் தெரிவிக்கப்படும் அறிக்கைகளை அது மேலும் மீள்வலியுறுத்துகிறது.

இதுவும் கூட, ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச பங்குபற்றுவதாக சொல்லப்படுகின்ற ஒரு நிலையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வு ஆரம்பிப்பதற்கு சில நாட்கள் முன்னதாக நிகழ்ந்துள்ளதுடன், இலங்கையில் சீர்குலையும் மனித உரிமைகள் நிலைமை மற்றும் வலுப்பெற்றுள்ள குற்றவிலக்களிப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் பட்டயத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள விழுமியங்களைப் பேணுவதற்கு இலங்கைக்கான தேவை என்பவை குறித்து இது ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் என்பன கரிசனைகளை எழுப்புவதற்கான ஒரு வாய்ப்பினையும் வழங்குகிறது.